# திருவள்ளுவர் ஒரு நடப்பியல் கவிஞர்

கருவை.பழனிசாமி

காரல் மார்க்ஸின் தத்துவத்தின் வறுமை என்று Poverty of Philosophy உலகப்புகழ் பெற்ற கட்டுரை ஒன்றுண்டு. அது வறுமையின் தத்துவம் Philosophy of Poverty என்ற புருத்தேன் கட்டுரைக்குக் கண்டன மறுப்பாக வெளியிடப்பட்ட கட்டுரை.

ஒரு நாடு சிறந்து வாழும் மக்கள் புகழ் பெறக்கூடிய வகையில் பண்பாடு ஓங்க வேண்டும். பகை கூடாது; நட்பு நிலவ வேண்டும். அதற்குப் படை நடத்திப் போரிட்டாவது அமைதியை நிலைநாட்டுவது அவசியமாகிறது. தூதுவர், ஒற்றர் பெரியார் துணை வேண்டும்; கல்வி அறிவு செழிக்க வேண்டும். பேதைமையும், புல்லறிவான்மையும் நீங்க வேண்டும். ஆள்வினை உடைமையும், ஊக்கமுடைமையும் இன்றியமையாதவை. சிற்றினம் கூடாது. வரைவின் மகளிர் உறவு கூடாது; சூது கடாது. கள் வேண்டாம். மானம் போற்றிச் சான்றாண்மையோடு பண்புடைமையைக் காத்துப் பொருள் வளம் ஓங்க உழவைக்கைக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஓர் உயர்ந்த இலட்சியத்தை இலக்க எல்லையாக முன் வைத்து உருவானது திருக்குறள்.

இத்தகைய நாகரிகமும் பண்பாடும் செழிப்பதற்குத் தடையாக இருப்பது வறுமை. அந்த வறுமையின் உடன் விளைவாக நிகழ்வது மனித நடத்தையில் விரிசல். அதனைக் கயமை என்று சுட்டிப் பழிக்கின்றார் அய்யன் திருவள்ளுவர். அந்தக் கயமைக்குக் காரணமான வறுமையைப் பழிக்க ஓர் அதிகாரம் 'நல்குரவு' என்ற பெயரில் அமைந்துள்ளது; அந்த 'நல்குரவு' தீர 'இரவு' பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அது ஓர் விதிவிலக்காகவே இடம் பெற்றுள்ளது. ஆனால் விதியாகத் திருக்குறளில் வற்புறுத்தப்பட்டு வரையறுக்கப்படுவது 'இரவாமை'; மானம் தீரா இரவு, இராவமையோடு ஒத்துள்ளது என்ற அடிக்கருத்தால் உடலோம்பி உயிர்காக்க இரத்தல் தவிர்க்க முடியாததாகவும், ஆகவே அதனை விதிவிலக்காகவும் குறிப்பிட்டுள்ளதை உணர இயலும். man in Black in citizen of world begging: It is a pragmatic subject to some conditions.

'இரவச்சம்' என்ற பெயரிட்டு மானம் தீர வரும் இரவிற்கு அஞ்சுதல் வேண்டும் என்பதனை விதியாக வரையறுத்துள்ளார் திருவள்ளுவர்.

It is a dogma though relatively.

தன்னிடம் உள்ளதை மறைக்காமல் இரப்பவர் வந்ததற்கு மகிழ்ந்து கொடுப்பவர் கண்போல வாழ வழிகாட்பவர். அவரிடம் கூட இரந்து வாழ எண்ணாமல் வல்லதோர் முயற்சிமேற்கொண்டு உயிரோம்பலே மிகமிக நல்லது என்பது விதி; இரந்து செல்வம் பெறுவதைவிட இரவாமையே கோடி மடங்கு நல்லதாகும். முயற்சி செய்து உழைத்து வாழாமல் இரந்து வாழ்வது யாருக்குப் பெருமை தரும்? மக்களுயிர்க்கும் மற்ற உயிர்க்கும் வேண்டிய வாழ் நாளெல்லாம் உண்ண உணவும், அதற்கு ஏற்ற செய்தொழிலும் கருக் கொண்ட போதே இறைவன் உருவாக்கியிருக்க வேண்டும்; அப்படியில்லாமல் சில உயிர்கள் இரந்து தான் பிழைத்திருக்கக் கூடியபடி இரத்தலை ஒரு செய்தொழிலாகக் கற்பித்திருப்பானேயாயின் அத்தீமைக்குத் தானும் பழிக்குள்ளாகி அலைந்து துன்புற வேண்டும் என்று குறள் பழி சுமத்துவது ஒரு விதியாக இடம் பெற்றுள்ளது.

வறுமைதீர உழைப்பதே நெறி: இரப்பது நெறியாகாது. உழைக்காமலே இரக்க முயல்வது சிந்தனையற்ற முரட்டுச் செயலாகும்: அது மட்டுமில்லை; நுகர வேண்டுவன இல்லாமல் வறுமை துன்புறுத்தும் போது கூட இரத்தலுக்கு மனம் துணியாதது பெருமைக்குரியது; பெருமைக்குரிய சான்றோர்க்கு வறுமை தீர இரவு நெறியாகாது. தன் உழைப்பால் கிடைப்பது கூழே ஆனாலும் அமிழ்து போல் இன்பமாவது; காரணம் இழிவான இரவு மூலம் வருவது துன்பமாகும். பசுவைக் காப்பது அறமே ஆனாலும் அதற்காகக் கூட இரப்பது பழி தருவது ; முயற்சியின் மூலம் செய்யத்தக்கது அறம்; அது புகழ் தருவதாகும்.

இவ்வளவு விதிக்கும் இடம் தராமல் இரப்பது என்றால் மறைப்பவர்பால் இரக்க வேண்டாமென்று திருவள்ளுவர் மன்றாடுகின்றார்.

முயற்சியால் வறுமை தீர வேண்டும்; இரப்பது பாதுகாப்பானதாயிராது; காரணம் மறைப்பதான நிலத்தில் இரவாகிய ஓடம் செல்லாது உடையும்.

இல்லை என்ற சொல்லைக் கேட்டபோது இரப்பவன் உயிர் போயிவிடும். சொல்லுகிறவனிடம் எப்படி அந்த உயிர் தங்கியிருக்க முடியும்? இரப்பது பெருங்கொடுமை; இல்லை என்று மறைப்பது அதை விடப் பெரிய கொடுமை; ஆகவே இரப்பது தவறானது. எனவே இரவச்சம் வகுப்பது ஒரு துருவத்தில் நின்று முழங்கும் விதியாகத் தெரிகிறது. இந்த விதி வறுமைக்கு மாற்றாகுமா? வறுமையிலிருந்து தப்பி வாழ உதவுமா? வாழ்வதற்கு வறுமை ஒரு தடை; வறியவனுக்கு 'இரவச்சம்' ஒரு தடை: இதனைச் சரிபார்த்து அய்யன் திருவள்ளுவர் ஒரு முடிவுக்கு வர நல்குரவான வறுமைத் துன்பத்தை எண்ணி எண்ணிக் கலங்குவது ஒரு வகையில் கைகொடுக்கிறது.

வறுமை இன்பத்திற்குத் தடையாவது மட்டுமா? உறக்கத்திற்கும் தடையானது? நற்பொருள் நன்குணர்ந்து சொல்ல முடியாதபடி கல்வியைப் பயன்படாததாக்கி விடுவது வறுமை. அறத்திற்கு இடையுறாக வறுமை நிலவும்போது தாயுள்ளத்தின் பாசப் பார்வைக்கும் தடையாகி விடுகிறது. முடிவாக ஏதும் நுகர இயலாத கொடிய வறுமையினால் அது துறவு பூணத் தூண்டலாகி விடுகிறது. முற்றத் துறப்பது ஒன்றே வழி என்றால் உடலை இழப்பது; உப்பிட்ட கஞ்சியைக் குடித்தாவது உடலைப் பேண முயலும் போது வறுமை திருடவும் துணையாகிவிடுகிறது. எனவே வறுமை அறத்திற்கும் தடை. மருந்து மந்திரங்களினாலும் நெருப்பிலே கிடக்கவும் முடியுமானால், வறுமை அறத்திற்கும் தடை. மருந்து மந்திரங்களாலும் நெருப்பிலே கிடக்கவும் முடியுமானால், வறுமைத் துயர் பெருகும் போது மருந்தும் மந்திரமும் கொண்டு உறங்க முடியுமா?

இத்தகைய கொடிய வறுமை நாட்டிற்குக் கேடு தருவதாகிறது. அதன் பிடியிருந்து தப்பிப் பிழைக்கவே இரத்தல் ஒரு விதி விலக்காகித் திருக்குறளில் இடம் பெற்றுள்ளது. தனி நபருக்குத் தீமை தராத இரவு ஒரு சமூகத்தீமையே ஆனாலும் விலக்கி வைக்க முடியாததாகிவிட்டது.

சூது தனிநபருக்குக் கேடு தருவது; அது
விலக்கப்பட்டது சரி.

தனிநபருக்குக் கேடு தருவது. களீ; அது விலக்கப்பட்டது சரி; தனி நபருக்குக் கேடு தருவது வரைவின் மகளிர் உறவு; அது விலக்கப்பட்டது சரி; தனி நபருக்குக் கேடு தருவது இரவாமை; எனவே அது விலக்கப்பட்டது சரி; இரவாமையாகிய இரவச்சம் ஒரு விதியானதுசரி. அது சமூகத் தீமைதான் என்றாலும் தனி நபரைக் காப்பதனால் அதற்கு விலக்கப்பட்டது சரி; இராவாமையாகிய இரவச்சம் ஒரு விதியானது சரி. அது சமூகத் தீமைதான் என்றாலும் தனி நபரைக் காப்பதனால் அதற்கு விலக்களித்து வள்ளுவர் கவிதை தீட்டியது, சரி. எனவே இரக்க இரத்தக்கார் காணின் என்று விதிவிலக்கை முன்வைக்கிறார். இரவு அதிகாரத்தில் இன்பம் ஒருவற்கு இரத்தல் என்றும் இரப்பும் ஓர் ஏஎர் என்றும் பாடமுடிகிறது.

இரத்தலும் ஈதலே என்று வழி வகுக்க இடமுள்ளது; இரத்தலின் மூலம் வாயும், வயிறும் நிறைய மகிழ்ந்து உள்ளம் உவப்பது என்று கொண்டாட முடிகிறது. இரவச்சம் ஒரு துருவம் என்றால் இரவு நேர் எதிரான மற்றொரு துருவம். இரண்டிலும் நியாயம் காண முயல்வது வள்ளுவர் நெஞ்சம். அதனால் இரண்டில் ஒன்றை விடுவதற்கும் அவர் மனம் தயங்கியது வெளிப்படை. எனவே, இரண்டையும் வரவேற்றுப் பாடுவதே உலக நீதி என்று கருதிய அய்யன் திருவள்ளுவர் ஒன்றை விதியாக்கிய கையோடு மற்றதை விதிவிலக்காக்கியதை உணர்ந்து போற்ற முடிகிறது. இது அவரது இலக்கிய நியாயம்; இதுவே அவருடைய அணுகுமுறை; இதனைப் போற்றி அரண் செய்யும் நோக்கில் அறிஞர் மு.வ. வாழ்க்கை விளக்கம் செய்து எழுதியதை ஒத்துக்காண வேண்டியுள்ளது.

தெருவில் பிச்சைக்காரர்களைக் காண்கின்றோம். அவர்களுக்கு ஏதாவது கொடுத்து உதவினாலும், அவர்கள் மேன்மேலும் இரந்து வாழ்வதற்கு ஊக்கம் ஊட்டியது போல் ஆகின்றது. அல்லது, அவர்கள், இந்த நாட்டின் பெயர் கெடும்படியாக இரப்பதை விட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஒன்றும் உதவாமல் வந்தால், அவர்களுடைய உயிர் வாழ்க்கைக்காக ஒருவழியும் செய்யாமல் ஒதுங்கிய குற்றம் சார்கின்றது. எல்லோரும் இவ்வாறே எண்ணி உதவி செய்யாமல்

விட்டுவிட்டால், அவர்களில் அஞ்சானம் மிகுந்தவர்கள் திருடு முதலியன செய்து பிழைக்கத் துணிவார்கள்; மற்றவர்கள் பட்டினியால் மெலிந்து வாடி அழிவார்கள்.

இந்த நிலையில் என்ன செய்வது? தனிப்பட அவர்களுடைய நன்மையைக் கருதி உதவியும் செய்ய வேண்டும். நாட்டின் நன்மையைக் கருதி இரக்கும் தொழிலை அவர்கள் கைவிடுமாறு சீர்திருத்தமும் செய்ய வேண்டும். திருவள்ளுவர் இந்த இரண்டையுமே தனித்தனியாக இரண்டு அதிகாரங்களில் கூறுகின்றார். வறுமையின் கொடுமையிலிருந்து தப்பி வாழ இரப்போர் நல்லவர்களை நாடி இரக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு உதவி செய்வது நல்லவர்களின் கடமை என்றும் “இரவு” என்னும் அதிகாரத்தில் கூறுகின்றார். அதை அடுத்து இரந்து உயிர் வாழ்வது தவறான வாழ்க்கை என்று “இரவச்சம்” என்னும் அதிகாரத்தில் அந்தத் தொழிலைக் கடிகின்றார். அதனால் தான் ‘தக்கவர்களைக் கண்டால் இரந்து உதவி பெறலாம்’ என்று ஓர் இடத்தில் இரப்பவர்களின் உயிர் வாழ்க்கையைக் கருதி இரக்கம் கொண்டு பாடிய பின், கண்போல் சிறந்த மிக நல்லவர்களிடத்திலும் இரந்து உதவி பெறாமல் வாழ்வதே கோடி மடங்கு நல்லது என்று நாட்டின் பொது நலம் கருதிய போது கடிகின்றார். இது முரண்பாடாகாதா என்று எண்ணிட இடமில்லை. மாநகரங்களில் போக்குவரத்தைச் சீர் செய்யும் முச்சந்திகளில் சிவப்பு விளக்கைக் கொண்டு தடை செய்தும் பச்சை விளக்கைக் கொண்டு தடை செய்யப்பட்ட வாகனங்களைச் செல்ல அனுமதிப்பதும் ஏககாலத்தில் நடைபெறுவது போன்ற ஒரு அணுகுமுறையாகக் கருத இடமுள்ளது. விதியும் விதிவிலக்கும் இடம் பெறுவது குறிக்கோளியலும் நடப்பியலும் ஒருசேர இணைய வழிவகுத்திருப்பது, இதனைச் சட்ட நியாயமென்றோ இலக்கிய நியாயமென்றோ கருதலாம்.

முப்பால் முற்றும் இந்த அணுகுமுறை இடம் பெற்றுள்ளதற்குச் சான்றுகள் உண்டு; ஒப்புரவறிதலில்,

1. ஒப்புரவினால் வரும் கேடெனின் அ∴தொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து (குறள்: 220)

என்று ஒரு துருவத்தில் முழங்கியவர் திருவள்ளுவர். அது விதி.

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும் (குறள்: 480)

இது விதிவிலக்கு

2. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் (குறள்: 373)

என்பது விதி

தொட்டனைத்தூ றும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூ றும் அறிவு (குறள்: 396)

என்பது விதிவிலக்கு.

3. ஊழிற்பெருவலியாவுள? மற்றொன்று
சூழினும் தான் முந்துறும் (குறள்: 380)

என்பது விதி

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்றுபவா (குறள்: 620)

என்பது விதிவிலக்கு.

4. ஓர்ந்துகண்ணோடாது இறை புரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வ∴தே முறை (குறள்: 541)

என்பது விதி

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு (குறள்: 578)

என்பது விதிவிலக்கு.

5. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது (குறள்: 481)

என்பது விதி

குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து

மானம் கருதக் கெடும் (குறள்: 1028)
என்பது விதிவிலக்கு.

6. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது (குறள்: 99)
இது விதி.

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியர்
இன்சொல் இழுக்குத் தரும் (குறள்: 911)
இது விதிவிலக்கு.

7. எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு (குறள்: 299)
என்பது விதி

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் (குறள்: 292)
என்பது விதிவிலக்கு.

8. உண்ணற்க கள்ளை (குறள்: 922)
என்பது விதி

…………… உனில் உண்க சான்றோரான்
எண்ணப் பட வேண்டாதார் (குறள்: 922)
என்பது விதிவிலக்கு.

9. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. (குறள்: 485)
என்பது விதி

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து (குறள்: 879)
என்பது விதிவிலக்கு.

10. இரவாது உவந்தியும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும் (குறள்: 1061)
என்பது விதி

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு (குறள்: 1054)
என்பது விதிவிலக்கு.

இன்பம் ஒருவர்க்கு இரத்தல் இரந்தனை
துன்பம் உறாஅ வரின் (குறள்: 1052)
என்பது விதிவிலக்கு.

அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் தனது கார்பு நிலைக் கோட்பாட்டினை Theory of Relativity – யை விளக்கப் பின்வரும் மேற்கொள் விளக்கம் தந்து அதனை எளிமையாக்கிக் காட்டியுள்ளார்.

அழகிய பெண்ணின் அருகில் ஒரு மணி நேரம் பொழுது போக்கினாலும் அது ஒரு நிமிடம் போலாகும்; ஆனால் வெப்ப அனல் வீசும் அடுப்பருகில் ஒரு நிமிடம் நிற்பது கூட ஒரு மணி நேரம் ஆகத் தெரிந்து துன்புறுவதுண்டு.

இதே அணுகுமுறைக் கோட்பாடு வள்ளுவரிடத்திலும் இருப்பது தான் இன்றைய வாழ்விற்கு வள்ளுவர் வழங்கும் செய்தி என்று கண்டுணர்ந்து போற்ற இடமுண்டு.

புருத்தேன் என்ற அறிஞர் வறுமையின் தத்துவம் என்று Philosophy of Poverty கட்டுரை தீட்டினார். அதனை மறுத்துணிக் காரல் மார்க்ஸ் தத்துவத்தின் வறுமை Poverty of Philosophy என்று கண்டனக் கட்டுரை தீட்டினார். வள்ளுவர் குறிக்கோளியலுக்கும் நடப்பியலுக்கும் இடைவெளி தோன்றாதபடி வாழ முனைவதற்குத் தூண்டி வழி கோலுகிறார்:

சொல்வேறு செயல் வேறுபட்டார் தொடர்பினைக் கனவிலும் கொடியது என இகழ்ந்து உரத்துச் சிந்தித்தவர் திருவள்ளுவர். கசடறக் கற்கவும் கற்றபடி நிற்கவும் கற்றுத் தருவதே வள்ளுவர் வரையறுத்துக் கொண்ட கருதுகோள். அதனைச் சரி பார்க்கத் திருக்குறள் முப்பாலையுமே முதன்மைத் தரவாகக் கொண்டு முயல்வது இக்கட்டுரையின் கருதுகோளாகும். தன் கொள்கைக்கும் செய்கைக்கும் முரண்பாடு வர

இடமளிக்காதபடி சொல்லியவண்ணம் செயல்படுவதை எளிதாக்குவதற்கு வழிவகை காட்டுவது திருக்குறள். எனவே தான் திருவள்ளுவரை நடப்பியல் கவிஞர் என்று தீர்மானிப்பது எளிதாக உள்ளது. அறத்துப்பாலில் கூடாவொழுக்கம் பாடிய கவிஞரே, பொருட்பாலில் கயமை என்றும் சமுதாயத்தின் இருண்ட பக்கத்தைத் தயக்கம் இல்லாமல் காட்டிடத் துணிகிறார். கூடாவொழுக்கத்தை முரசொலித்து அறிவித்தபோது எத்தகைய கடும் எதிர்ப்பு முளைத்திருக்கும்? கயமையை அழுத்திச் சொன்னதை உலகம் ஏற்றுக் கொள்ள முன்வரக் காலம் இன்னும் கனிந்தாகத் தெரியவில்லை. கூறியது கூறலாக அது இருப்பினும் அதனால் பெரும் பயன் உண்டாகுமானால் குற்றமாகாது என்றே எண்ணலாம்.

அறத்துப்பாலில் காட்டிய கண்டிப்புக் கொஞ்சமும் பொருட்பாலில் குறையாமல் இருப்பது கண்கூடு. இருந்தபோதிலும் திருவள்ளுவர் தாராளமாக இருப்பதற்கு இடமளிப்பது தெரிகிறது.

கடிதோச்சி மெல்ல எறிக என்பது ஒரு நெறி; எற்றென்று இரங்குவ செய்யற்க என்பது ஒரு நெறி. ஈன்றாள் பசியைப் போக்குவது கடமை; சான்றோர் பழிக்கும் வினையைத் தவிர்ப்பது கூட கடமை; இரண்டு கடமைகளில் முன் நிற்பது எது; முதன்மை பெறுவது எது? மதிப்புகள் காலந்தோறும் மாறுவதுண்டு; பயன்கள் இடத்திற்கு இடம் வேறுபடுவதுண்டு. இன்னா செய்யாமையைத் தலைமேல் வைத்துக் கொண்டாடிய அண்ணல் காந்தியடிகள் கூட இந்தத் தர்மசங்கடத்திற்குப் பதில் வழங்கியுள்ளார். தங்கையின் கற்பைப் போற்றுவதற்காக இன்னா செய்யாமையைக் கைவிடலாம் என்பது காந்தியம். சான்றோர் கழிநல்குரவே தலை என்பதை இரந்து வாழ்வதற்குத் தடையாகக் கருதக்கூடாது. இங்குதான் வள்ளுவர் நோக்கத்தையும் அதை நிறைவேற்றத்தக்க பாதையையும் ஒப்பிட்டறியச் சொன்னதை உணர வேண்டும். Valluvar is always particular about end and means concept.

இலக்கு எல்லை ஏதாயினும் அது பற்றிய கவலையை விட அந்த இலக்க எல்லையை அடையப் பின்பற்றுப்பட வேண்டிய வழிமுறையைப் பற்றிய கவலையே வள்ளுவர் பெரிதாக மதித்தது தெரிகிறது.

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

என்ற விடத்து வள்ளுவர் நடப்பியல் கவிஞராகி வாய்மையை விசாலப் பார்வையால் எளிமையாக்கி விடுகிறார்.

இருநோக்கு இவளுன் கண்உள்ளது ஒருநோக்கு
நோய் நோக்கு ஒன்றுந்நோய் மருந்து (குறள்: 1091)

யான் நோக்குங்கால் நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்லநகும். (குறள்: 1094)

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே உள (குறள்: 1099)

அதுதான் நடப்பியல் நோக்கு.

ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட் சென்றார்
வருநாள் வைத்து ஏங்குவர்க்கு (குறள்: 1269)

இக்குறள் நெறியை முன்சொன்ன மூன்று குறள் நெறியோடு இணைத்துப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். காமத்துப் பாலில் பயன்படுகிற தாராளப் பார்வை தான் ஏனைய அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் வள்ளுவரின் நடப்பியல் பார்வைக்கு அடித்தளம் ஆகிறது.

கவிஞர்களில் ஒரு ஞானியகாவும் ஞானிகளில் ஒரு கவிஞராகவும் விளங்கும் வகையில் வள்ளுவரின் வான்புகழ் ஓங்கியது வெள்ளிடைமலை.

Thus he is a famous progmatic poet being a beacon light not only to the Tamils but to every one in every other part of the world.